# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC No.98/2024**

Name : குமார் (PW1)

**Date:** 19.05.2026

எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

M.P No.15/2026, 16/2026 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் விசாரிக்கப்படுகிறார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்ததாக சொல்லும்ரோடு சோலார் டூ முத்தூர் செல்லும் பிரதான சாலை என்றால் சரிதான். மேற்படி பிரதான சாலையில் நான் சோலாரில் இருந்து லக்காபுரம் நோக்கி வந்தேன் என்றால் சரிதான். மேற்படி சாலையில் மேற்குபுறமாக வந்தேனா என்றால் இல்லை, கிழக்குபுறமாக வந்தேன். எனக்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது. நான் ஓட்டிய வாகனத்திற்கு வாகன பதிவு சான்றிதழ் உள்ளதா என்றால் இல்லை. அந்த வாசகனத்திற்கு காப்பீடு சான்று இல்லை என்றால் சரிதான். நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் இருட்டாக இருந்தது என்றால் இல்லை. சம்பவத்தின் போது யாரும் இல்லை, விபத்துக்கு பிறகு தான் வந்து உதவி செய்தார்கள் என்றால் சரிதான்.

2. எனக்கு எதிர்திசையில் வந்ததாக சொல்லும் வாகனம் என்ன வகையான வாகனம் என்றால் தெரியாது. எனக்கு முறையான ஓட்டுனர் உரிமம், காப்பீடு இல்லாமல் தகுதியான வாகனத்தை ஓட்ட தெரியாமல் கவனக்குறைவாக சாலையின் மேற்குபுறமாக ஓட்டி வந்து திடீரென பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த வாகனத்தின் முன்பாக மேற்படி சாலையில் இடதுபக்கம் செல்ல வேண்டி சாலைவிதிகளை பின்பற்றாமல் திடீரென சாலையை கடக்கும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து இழப்பீடு பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பின்னிட்டு அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு தன்னிசையாக வெளியேறிவிட்டேன் என்றால் சரியல்ல. மறுநாள் தான் தனியார் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் மதுபோதையில் இருந்ததால் தான் மருத்துவமனையில் தன்னிசையாக வெளியேறி விட்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.19 14:33:50 +0530